## குளித்தலை நகராட்சி

03.01.2022ஆம் தேதி திங்கட்க்கிழமை மதியம் 01.30 மணிக்கு
நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற்ற அவசரக்கூட்டம்

ப.சுப்புராம்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்– 01. இந்நகராட்சி பேருந்து நிலையம் அருள்மிகு பேரான குந்தாளம்மன் திருக்கோவிலுக்கு சொந்தமான 1.22 ஏக்கர் காலயிடத்தில் வாடகை அடிப்படையில் இயங்கி வருகிறது. நகராட்சியின்மூலம் வாடகை தொகை செலுத்தவில்லை எனவும் மேற்கண்ட இடத்தினை ஆக்கிரமிப்பு செய்ததாக தெரிவித்து இந்து சமய அறநிலையத் துறை இணை ஆணையர் நீதிமன்றத்தில் (திருப்பூர்) 08.12.2021ஆம் தேதியன்று விசாரணைக்காக நகராட்சி ஆணையர் நேரில் ஆஜராக கோரி அறிவிப்பு வரப்பெற்றது. அதன் அடிப்படையில், இந்நகராட்சி ஆணையர் திருப்பூர் சென்று நேரில் ஆஜராகி, தொகை செலுத்துவது குறித்து ஒருமாதம் காலஅவகாசம் வழங்க கேட்டுக்கொள்ளப்பட்டது. இதனிடையில், செயல் அலுவலர், அருள்மிகு பேரான குந்தாளம்மன் திருக்கோவில், குளித்தலை அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட விபரப்படி தொகை செலுத்த தெரிவித்து கடிதம் வரப்பெற்றது.

| வ. எண். | விபரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1) | நிர்ணயிக்கப்பட்ட நியாய வாடகை 01.07.2016 முதல் | 74000.00 |
| 2) | 01.07.2016ல் ஆரம்ப நிலுவை | 567123.00 |
| 3) | 01.07.2016 முதல் 30.06.2019 முடிய எழுப்பப்பட வேண்டிய கேட்பு | 2664000.00 |
| 4) | 01.07.2019 முதல் நிர்ணயிக்கப்பட வேண்டிய வாடகை 15% உயர்வு செய்து | 85100.00 |
| 5) | 01.07.2019 முதல் 30.06.2021 வரை எழுப்பப்பட வேண்டிய கேட்பு | 2042400.00 |
| 6) | மொத்த கேட்பு | 5273523.00 |
| 7) | பசலி 1426 முதல் 1430 முடிய வசூல் | (–) 1445661.00 |
| 8) | பசலி 1430 முடிய இருக்க வேண்டிய நிலுவை | 3827862.00 |
| 9) | 01.07.2020ல் ஆரம்ப நிலுவை | 3827862.00 |
| 10) | 20.07.2020ல் செலுத்திய தொகை | (–) 156221.00 |
| 11) | 01.07.2020ல் நிலுவை | 3671641.00 |
| 12) | 30.11.2021 வரை கேட்பு | 1446700.00 |
| | மொத்தம் | 5118341.00 |
| 13) | காலிமனைவரி | 69152.00 |
| 14) | மீதி செலுத்த வேண்டிய நிலுவை தொகை மொத்தம் | 5049189.00 |

இந்நகராட்சியின் பேருந்துநிலையம் அவசியம் கருதி, மேற்கண்ட தொகை ரூ.5049189/–ஐ செலுத்தவும், 01.12.2021 முதல் ஒருமாதத்திற்கு வாடகையாக ரூ.85100/–ஐ செலுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). பேருந்து நிலையத்தின் அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டு, மேற்கண்ட தொகையினை பொது நிதியிலிருந்து செலுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.2873/2001/அ1)

*******

## குளித்தலை நகராட்சி

03.01.2022.ஆம் தேதிய அவசரக்கூட்டத் தீர்மானத்தின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 297 | அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/—ப.சுப்புராம்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர்,
குளித்தலை நகராட்சி.